2013 ஏப்ரல் 25]

அதிகரிக்கும்போது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவினைப் பெற்று, குளிர்சாதனப் பேருந்து இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்பட்சத்திலே அந்த வழித்தடத்திலே பேருந்து இயக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துறை அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பாகவும், என் தொகுதி மக்கள் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 317, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

317—

வெளிநாடுவாழ் தமிழர் நலத் துறை

***14718—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளிநாடுவாழ் தமிழர்கள் நலனுக்கென ஒரு துறையை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) உலகில் எந்த மூலையில் தமிழர்கள் வாழ்ந்தாலும் அவர்கள் நலன்களில் அக்கறை கொண்டு அவர்கள்

நல்வாழ்விற்காகவும், அவர்களுக்கு எந்தப் பிரச்சினை என்றாலும் அதைத் தீர்த்து வைப்பதிலும், அவர்களுக்காக குரல் கொடுக்கும் ஒரே தலைவியாக (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் விளங்குகின்றார்கள். உலகிலுள்ள அனைத்துத் தமிழர்களின் பாதுகாவலராகவும், அனைத்துத் தமிழர்களின் உண்மைத் தலைவியாகவும் விளங்குபவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். இதை இந்த உலகில் உள்ள தமிழர்கள் நன்றாக உணர்ந்துள்ளார்கள். அந்த வகையில் வெளிநாடுவாழ் தமிழர்கள் பிரச்சினை மற்றும் அவர்களது பல்வேறு தேவைகளை நிர்வகிக்க ஏதுவாக சென்னையில் உள்ள மறுவாழ்வுத் துறை இயக்குநரகத்தில் வெளிநாடுவாழ் தமிழர்கள் நலனுக்காக தனியாக ஒரு நிருவாகப் பிரிவு ஏற்படுத்தப்பட்டு, செயல்பட்டு வருகின்றது. அந்த வகையில், இதுவரையில் வெளிநாட்டில் இறந்தோருக்கான இழப்பீட்டுத் தொகை அந்தந்த தூதரகங்கள் மூலமாகப் பெறப்பட்டு இதுவரை சுமார் 200 வெளிநாடுவாழ் தமிழ் குடும்பங்களுக்கு நமது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் முயற்சியால் 11,52,54,753/– ரூபாய் அந்தந்த மாவட்ட ஆட்சியர்மூலம் வழங்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்ற நல்மொழிக்கேற்ப சுமார் 50 இலட்சத்திற்கும் அதிகமான தமிழ் மக்கள் வெளிநாடுகளில், உலகெங்கும் வாழ்கிறார்கள்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய தீவிர உழைப்பால் மற்றும் வியாபாரம் மற்றும் தொழில் மூலமாக விஞ்ஞானிகளாக, தொழிலதிபர்களாக, மருத்துவர்களாக பல்வேறு வகைகளிலே வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் தமிழ் மண்ணுக்குப் பெருமை சேர்க்கிறார்கள். அன்னியச்

2013 ஏப்ரல் 25]

*செலாவணியை நமக்கு அதிகமாக ஈட்டித் தருகிறார்கள். சமீபகாலமாக வெளிநாட்டுத் தமிழர்கள் பலரை இன்னல்களுக்கு ஆளாக்கி, குற்றம் செய்யாமலேயே பல வழக்குகளில் அவர்களை சம்பந்தப்படுத்தியுள்ளார்கள். இதன்மூலம் பலர் சித்ரவதை செய்யப்பட்டு வருகிறார்கள். பணி நிமித்தம் பலர் ஏமாற்றப்பட்டுள்ளார்கள். தாய்நாட்டிற்குக்கூட வரமுடியாமல் கஷ்டப்படுகிறார்கள். வேலைக்குரிய கூலி கிடைக்காமல் வஞ்சிக்கப்படுகிறார்கள். நஷ்டஈடுகூட கிடைக்காமல் மறுக்கப்பட்ட நிலையிலே உள்ளார்கள். இந்த நிலையைப் போக்குவதற்கு ** பேசியபடி சம்பளம் கொடுக்காமல் பாஸ்போர்ட் கொடுக்காமல் அவர்கள் ஏமாற்றப்படுகிறார்கள். தாய்நாட்டிற்குக்கூட வர முடியாமல் அவதிப்படுகிறார்கள். பல்வேறு நலத் திட்டங்களின் மூலமாக தமிழக மக்களைப் பாதுகாக்க முன்வரும் இந்த அரசுக்கு இந்த மக்களுடைய அவல நிலையைக் கருத்தில் கொண்டு தமிழர்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு உண்டு. ஆகவே, கேரள மாநிலத்தைப்போல தமிழகத்திலும் இதற்கென தனியே ஓர் அமைச்சகம் உருவாக்கினால் வெளிநாடுவாழ் தமிழர்களைக் காப்பாற்ற முடியும். அதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எனது பதிலிலேயே சொல்லிவிட்டேன். தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்களின் நலன் தொடர்பான பணிகள் தற்போது ஆணையர், அகதிகள் மறுவாழ்வு மற்றும் தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் ஆணையரகம்மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வெளிநாடுவாழ் தமிழர்கள் நலன் குறித்த பணிகளை மேற்கொள்ள மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, பொது (மறுவாழ்வு) துறையின் ஆணையம் மூலமாக மறுவாழ்வுத் துறையில் ஒரு நிருவாகப் பிரிவு தனியாக அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றது. அதன்மூலம் வெளிநாட்டில் பணிபுரியும் தமிழ் மக்கள் மற்றும் வெளிநாட்டில் வாழும் மக்களுக்கு அனைத்து பாதுகாப்பு வசதிகளும் மாண்புமிகு அம்மா*

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

அவர்களுடைய அரசால் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன. ** அவர்களுக்கு வெளிநாட்டில் எழக்கூடிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தத் துறையின்மூலம் அனைத்து முயற்சிகளையும் செய்து கொண்டு வருகின்றார்கள். அந்த வகையில்தான் இறந்தவர்களுடைய குடும்பங்களுக்கும் அந்த இழப்பீட்டுத் தொகையை மாண்புமிகு அம்மா அவர்கள் ரூபாய் 11 கோடிக்கு மேல் வாங்கிக் கொடுத்துள்ளார்கள் என்பதை என்னுடைய பதிலிலே தெரிவித்துள்ளேன். ஆக, வெளிநாட்டில் வாழும் தமிழர்களுக்கு வேண்டிய அனைத்து பாதுகாப்பையும் மாண்புமிகு அம்மா அவர்கள் செய்து வருகின்றார்கள் என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்று நான் சொல்லவில்லை. இருந்தாலும் வெளிநாடுவாழ் தமிழர்களுக்கு ஒரு நலத் துறை தேவை என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்கின்றேன். அதுமட்டுமல்ல; என் தொகுதியிலே மணவாளக்குறிச்சியைச் சார்ந்த ஜான் ஜோசப் தாஸ், ஓட்டுநராக. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், நீங்கள் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சரியான விளக்கம் சொல்லிவிட்டார்கள். நீங்கள் திரும்பத் திரும்ப அதைப்பற்றியே பேசினால் எப்படி? (குறுக்கீடு) ** என்ற குறிப்பு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் தொகுதியைச் சார்ந்த ஜான் ஜோசப் தாஸ் என்பவர் ஓட்டுநராக வேலை பார்த்தவர். 2009 ஆம் ஆண்டு ஒன்பதாம் மாதத்திலிருந்தே சிறையில் இருக்கிறார். அவரை மீட்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா? இதேபோல, என் தொகுதியிலே கருங்கல்லைச் சேர்ந்த திரு. ஜெயக்குமார் 3–6–2009. . .

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2013 ஏப்ரல் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், நீங்கள் இதைப்பற்றியெல்லாம் மானியக் கோரிக்கையில் பேசலாம். மானியக் கோரிக்கை விவாதம் வரவிருக்கிறது. அதில் நீங்கள் பேசலாம். இப்போது நீங்கள் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி பல்வேறு மக்கள் கஷ்டப்படுகிறார்கள். அவர்களை மீட்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடுவாழ் தமிழர்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தனியாக ஒரு ஆணையம் அமைத்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செயல்பட்டு வருகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் இழப்பீடு தொகையும், ** இதுவரை அந்த மாதிரி எதுவும் கிடையாது. ** அவர்களுக்கு இழப்பீடு வாங்கிக் கொடுப்பதிலும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முனைப்பாக செயல்பட்டுள்ளது என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினருக்கு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளில் வாழ்கின்ற தமிழர்கள் அங்கு சென்று பல்வேறு இன்னல்களுக்கு ஆளாக முற்படுகின்றபோது அது உடனடியாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு வந்தவுடனேயே அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் மாண்புமிகு அம்மா அவர்கள் தனிக் கவனம் செலுத்தி வருகின்றார்கள் என்பதனை நான் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் அங்கு சென்று பணிபுரிகின்ற நேரத்தில்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2013 ஏப்ரல் 25

** துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன். உதாரணமாக, அவ்வாறு அங்கு ஏதாவது ஒரு நிகழ்வு நடந்து, வர முடியாத சூழ்நிலை இருந்தால் அதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ் அவர்கள் சொல்லலாம். அதுமாதிரி ஒரு சூழல் சிறு அளவில்கூட நடைபெறவில்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொத்தாம் பொதுவாகச் சொன்ன அந்த வார்த்தைகளையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் ஆதாரம் இல்லாமல் கூறிய அந்தக் குற்றச்சாட்டு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

வினா வரிசை எண் 318, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ரெங்கசாமி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

318—

தங்கும் அறைகள்

***22237—திரு. எம். ரெங்கசாமி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் அருள்மிகு பிரகதீஸ்வரர் திருக்கோயில் மற்றும் சுற்றுப் பகுதிகளிலுள்ள திருத்தலங்களுக்கு வரும் பக்தர்களுக்கு தங்கும் அறைகள் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.

தஞ்சாவூர் அருள்மிகு பிரகதீஸ்வரர் திருக்கோயில், நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ளது. தங்கும் விடுதி கட்டும்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.